MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# காங்கேயம் வட்டார சிறுதெய்வ வகைகள்

கு.நடராஜ்,
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி,
சூலூர், கோவை-641 402.
கைபேசி: 9095741614,6381416496
மின்னஞ்சல்: natrajraja33@gmail.com,

முனைவர் வா.சித்ரா,
நெறியாளர், இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி,
சூலூர், கோவை- 641 402.

## “Types of Local Deities in the Kongu Region”

K. NATRAJ
PHD (FULL TIME)
TAMIL DEPARTMENT
RVS COLLEGE OF ARTS AND SCIENCE, SULUR
COIMBATORE 641402

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

Dr.V.CHITRA
ASSOCIATE PROFESSOR
GUIDE
TAMIL DEPARTMENT
RVS COLLEGE OF ARTS AND SCIENCE, SULUR,
COIMBATORE 641402

**ABSTRACT**

In rural areas, minor deities are celebrated with great fanfare. They have been worshipped by ancestors for a long time. They methods of worship very according to the type of minor deity. Based on a field study and data collected on the minor deities and their types in the kangayam region of the tiruppur district. This article aims to analyze the kangayam region. Minor deities and their types.

**Keywords:**Kangayam Locality – SiruDeivangal – Types – Kula Deivam – KaavalDeivam – VeetuDeivam.

**ஆய்வுச்சுருக்கம்**

கிராமபுறங்களில் சிறுதெய்வங்களை வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. காலம் காலமாக முன்னோர்களால் வழிபாடு செய்யப்பட்டு வணங்கி வருகின்றனர் .சிறு தெய்வ வகைகளுக்கேற்ப அதன் வழிபடும் முறைகளும் வேறுபடும். அதனடிப்படையில் திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் வட்டாரத்திற்குட்பட்ட சிறுதெய்வங்கள் மற்றும் அதன் வகைகளை கள ஆய்வு செய்து தரவுகளின் அடிப்படையில் காங்கேயம் வட்டாரம், சிறு தெய்வங்கள், மற்றும் வகைகள் போன்றவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**திறவுச்சொல்:**காங்கேயம்வட்டாரம்-சிறுதெய்வங்கள்-வகைகள்-குலதெய்வம்- காவல்தெய்வம்-வீட்டுத்தெய்வம்.

முன்னுரை

**"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"**

**(நாட்டுபுறவியல் ப.160)**

என்று ஒரு பழமொழி உண்டு. அது போன்று தற்போது ஊர்கள் இல்லாத இடத்தில் கோவில்கள் உண்டு. மக்களிடத்தில் தெய்வ நம்பிக்கை என்பது அசைக்க முடியாத ஒன்றாகும். தெய்வங்களை வணங்கும் போது அவை வேண்டியதை அருளும் என்றும் தன்னை கஷ்டத்திலிருந்து விடுவிக்கும் என்பர். இவற்றில் காங்கேயம் வட்டாரத்திலுள்ள சிறு தெய்வங்களில் மூன்று வகையான தெய்வங்களை விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

**காங்கேயம் வட்டாரம்**

தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் வட்டமாக அமைந்துள்ளது. இங்கு விவசாயம் பெரிதளவில் செய்யப்படுகிறது. நீர்ப்பாசனமாக பரம்பிக்குளம் ஆழியாறு மற்றும் கீழ்பவானி வாய்க்கால் அமைகிறது.

**"சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு**

**தோன்றுகாங் கேயநாடு"**

**(சிவன்மலை வரலாறு ப.15)**

24 கொங்கு நாடுகளில் காங்கேயம் நாடும் ஒன்றாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மேலும் இங்கு தென்னைமரம் அதிகளவில் இருப்பதால் தேங்காய்களம் மற்றும் எண்ணெய் தொழிற்சாலை அதிகமாக உள்ளது. பிறமாவட்டங்கள், மாநிலங்களில் இருந்துவரும் நெல்மணிகளை அரிசியாக கொடுக்கும் தொழிற்சாலைகளும் பெருமளவில் உள்ளது. நூற்பாலை அதனுடன் ஆடை தொழிற்சாலைகளும் அதிகளவில் உண்டு. காங்கேயம் என்றால் சிறப்பு என்பதற்கு காங்கேயங்காளைகள் ஆகும். திமில், கொம்புகள் நீளமான கால்கள் உடையவை. கடுமையான வெப்பத்தையும் குளிரையும் தாங்கக்கூடியது ஆகும். சிவவாக்கிய சித்தர் பாடல் பெற்ற தளமாக விளங்குவது சிவன்மலை. இங்கு ஆண்டவன் உத்தரவு பெட்டியில் வைக்கும் பொருள் பெரிதளவில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**சிறுதெய்வங்கள்**

சிறுதெய்வம் கிராமப்புறங்களில் வழிபடப்படும் தெய்வங்களாகும். இந்த சிறுதெய்வங்கள் கோவில் அல்லது மரத்தடியில், வெற்று வெளியிலும் வணங்கப்படுகிறது. உளவியல் அறிஞர் சிக்மண்ட்ஃபிராய்டு அவர்கள் வழிபாடு பற்றி கூறும்போது

**“இயற்கையிடமும் மரணத்திற்கு பின்பு வரக்கூடிய நிலையிடத்தும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை என்பர்.”**

**(நாட்டுப்புறவியல் ப.93)**

மனிதன் இயற்கையை வழிபட்டு பின்பு உருவமாக வழிபாடு செய்தான். காங்கேயம் வட்டாரத்தில் கருப்பண்ணசாமி, மதுரைவீரன்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

ஐய்யனார், முனியப்பன், ஐவர்ராசாக்கள், வீரக்குமாரசாமி போன்ற ஆண்தெய்வங்கள் உள்ளன. மாரியம்மன், கரியகாளியம்மன், பட்டத்தரசிஅம்மன், ஆதிஅம்மன், மாகாளியம்மன், கன்னிமார், ஆயிஅம்மன், பெரியநாயகி அம்மன், செல்லாண்டியம்மன் போன்ற பெண் தெய்வங்கள் உள்ளன.

## சிறுதெய்வவகைகள்

காங்கேயம் வட்டாரத்தில் பெரும்பாலும் சிறுதெய்வங்கள் மூன்று வகையாக பிரிக்கலாம்.

1. குலதெய்வம்
2. ஊர்த்தெய்வம் அல்லது காவல்தெய்வம்
3. வீட்டுத்தெய்வம்

மூன்று வகை தெய்வங்களே அதிகப்படியாக காணப்படுகிறது. இந்த மூன்று வகையான தெய்வங்களில் சிறப்பான தெய்வங்களை விரிவாக காண்போம்.

## குலதெய்வம்

குடும்பம் அல்லது பங்காளிகள் வணங்குவது குலதெய்வம் ஆகும். அவர்கள் வழி வழியாக வணங்கப்பட்டு வருகிறார்கள். குடும்பகஷ்டத்தை குலதெய்வத்திடம் முறையிட்டால் நன்மை ஏற்படும் என்பர். குலதெய்வத்தை வணங்குபவர்கள் அண்ணன் தம்பி முறையுடையவர்கள் ஆவார்கள். முதன் முதலில் குழந்தைக்கு

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

குலதெய்வம் கோவிலில் தான் மொட்டை அடித்து காது குத்துவார்கள். காங்கேயம் வட்டாத்திற்குட்பட்ட குலதெய்வங்களில் பாப்பினி ஸ்ரீ பெரியநாயகி அம்மன் சிறப்புடையது.

**“போதப் பழத்துக்கும் வாரித் தினம்தினம்**
**பொழிந்திடும் பார்ப்பதித் தோடை குலத்தவர்”**

**(சிவன்மலைவரலாறு ப.66)**

பாப்பினி ஊரின் பழம் பெயருள் ஒன்று பார்ப்பதி ஆகும். பேரூரிலிருந்து கொண்டு வந்த பச்சைநாயகி அம்மனை பேரூர் பெரியநாயகி அம்மனாக வழிபடுகின்றனர். இந்த கோவில் குலத்தவர் ஒருவர் பேரூர் சென்று குலதெய்வத்தை வணங்கிவிட்டு வரும் போது வெண்கற்கல் இரண்டை எடுத்து வந்து பாப்பினி ஊரின் மேல்புறம் வீசி விடுகின்றார். இரவு அவரது கனவில் தோன்றிய பச்சைநாயகி தாமே அக்கல்லில் குடியிருப்பதாகவும் கூறி கோவில் கட்டடப்படுகிறது என வாய் வழி செய்தியாக அறிய முடிகிறது. தற்போது பிரம்மாண்ட அளவில் கோவில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இக்கோயிலில்,

- தோடை
- கண்ணந்தை
- காடை
- கீரை
- வாணன்
- வண்ணக்கன்
- கண்ணன்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

போன்ற குலத்தவர்களின் குலதெய்வமாக வழிபடப்படுகிறது.

**ஊர்த்தெய்வம் அல்லது காவல்தெய்வம்**

ஒவ்வொரு ஊரின் காவல் தெய்வமே ஊர்த்தெய்வங்களாக கருதப்படுகிறது. காவல் தெய்வங்கள் நோய் மற்றும் கஷ்டங்களிலிருந்து காப்பாற்றுகிறது என நம்பப்படுகிறது. மேலும் திருட்டு, பேய், பூதம், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களில் இருந்து காப்பது காவல்தெய்வம் ஆகும். இந்த வகையில் தமிழ்நாட்டில் காவல் தெய்வங்கள் பல உள்ளன. நமது காங்கேயம் வட்டாரத்தில் மதுரைவீரன் வழிபாடு அதிகமாக காணப்படுகிறது. அந்த வகையில் பாப்பினி கிராமத்தில் வரதப்பம்பாளையத்தில் கிழக்கு பார்த்து முறுக்கிய மீசையும் வாளுடன் ஸ்ரீ மதுரைவீரன் வெள்ளையம்மாள், பொம்மி சமேதராக அருள்பாலித்து வருகின்றார். இது ஊர் காவல் தெய்வமாக மட்டுமில்லாமல் வட்டிகான் குல தெய்வமாகவும் விளங்குகிறது. இத்திருக்கோவில் முன்பு வாளுடன் கோர முகத்துடன் முனிகளும், குதிரை வாகனமும், காளைமாடு சிலை, இரண்டு ஆண் உருவசிலைகளும், வேல்களும் உள்ளன. கோவில் உட்பிரகாரத்தில் சப்தகன்னிமார்கள் மற்றும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர், வணங்குவது போன்று உருவச்சிலைகளும், தென் மூலையில் மூல கணபதியும், மூலவர் பின்புறம் புளியமரமும், வேப்பமரமும் ஸ்தல விருட்சமாக அமைந்துள்ளது. ஆலயமணி முனிவர் சிலைகளும் மதுரைவீரன் முன்புறம் இரண்டு காவலர்களும் கொண்டு கோவில் அமைந்துள்ளது.

மதுரையில் சின்னான் செல்லி ஆகியோருக்கு மகனாக பிறந்து,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

பொம்மையா நாயக்கர் மகள் பொம்மியை காதல் திருமணம் செய்தார்.

பொம்மையா நாயக்கருடன் போரிட்டு வெற்றி பெறுகிறார். பின்பு கள்வர்களால் சூழ்ந்த மதுரை, புதுக்கோட்டை சுற்று வட்டார பகுதியில் கள்வர்களை அழித்து கொட்டத்தை அடக்குகிறார். வெள்ளையம்மாளை காதலித்து திருமணம் செய்கிறார். பின்பு அவரை கொலை செய்வதும் கம்பத்தடி வீரனாவதும் வரலாறாக கூறப்படுகிறது. இந்த தெய்வம் ஊரில் நடக்கும் தீயவையை அழித்து மக்களை காத்து நன்மை அளிக்கிறார். இங்கு ஆடி மாதம் பூஜை, சாட்டுபொங்கல், சாமியாடுதல், அமாவாசை பூஜை, வெள்ளிக்கிழமை பூஜை, அடசல், கிடாவெட்டுதல், பூக்கேட்டல் போன்றவை சிறப்பாக நடைபெறுகிறது.

## வீட்டுத்தெய்வம்

வீட்டுத் தெய்வங்கள் என்பன வீட்டில் வாழ்ந்து மடிந்தவர்கள் மற்றும் கன்னிப்பெண்கள் இறந்து தெய்வம் ஆவது வீட்டுத்தெய்வ வழிபாடாகும்.

**“வீட்டில் எந்த மங்களகாரியம் நடைபெற வேண்டுமானாலும் வீட்டுத்தெய்வதிற்கு முதல் வழிபாடு செய்து குறிகேட்டுத் தான் நடைபெறுவது வழக்கமாக உள்ளது. ”(நாட்டார்தெய்வங்கள் ப.79)**

காங்கேயம் வட்டாரத்தில் முன்னோர்களை வழிபாடு செய்கின்றனர். கன்னிப்பெண்கள் இருந்தால் அவர்களை தெய்வமாக வணங்குகின்றனர். வீட்டில் கன்னிப்பெண்கள் இறந்தால் தோட்டத்தில் ஏழு வெண்கற்கள் கொண்டு சிலை அமைத்து

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

வெள்ளிக்கிழமைதோறும் பூஜை செய்து, ஆடி பொங்கலிட்டு வணங்குவார். இல்லையெனில் வீட்டில் ஒரு பானையில் ஏழு சிலைகளையும் போட்டு மூலையில் தூக்கி விடுவார்கள். வெள்ளிக் கிழமைதோறும் பூஜை செய்தும், வருடத்தில் ஒரு முறை இறக்கி வழிபாடு செய்வார்கள்.

**முடிவுரை**

காங்கேயம் வட்டாரத்தில் சிறுதெய்வங்களை கள ஆய்வு செய்ததன் அடிப்படையில் மூன்று வகையாக பகுக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று வகையான தெய்வங்களின் வழிபாடு, கோவில் அமைப்பு, வரலாறு, நேர்த்திக்கடன், மக்கள் கொண்டாடும் விதம் போன்றவற்றை தொகுத்து ஆராயப்பட்டுள்ளது. மக்களிடத்தில் சிறுதெய்வ வழிபாடு என்பன உணர்வு பூர்வமான நம்பிக்கையாக உள்ளது.

**துணைநூற்பட்டியல்**

1.சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், பக்.160., ஐந்தாம் பதிப்பு.2013, காவ்யா சென்னை.

2.செ.இராசு,சிவன்மலை வரலாறு, பக்.15., சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் காங்கேயம்.

3.முனைவர். மு.இளங்கோவன், பக்.93., முதற்பதிப்பு 2006, வயல்வெளி பதிப்பகம் பெரம்பலூர்.

4.செ.இராசு, சிவன்மலை வரலாறு, பக்.15., சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் காங்கேயம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

5.முனைவர். இரா.சந்திரசேகரன், கவிஞர் ப.சரவணன், நாட்டார் தெய்வங்கள், பக்.79.,முதற்பதிப்பு 2008, நாம் தமிழர் பதிப்பகம் சென்னை.

6.https:// ta.wikipedia.org.

7.https:// ta.wikipedia.org.

## தகவலாளர் விவரம்

1. குப்பன்,75, ஆண், கூலி, வரதப்பம்பாளையம்.
2. மகேஷ்வரன்,45, ஆண், விவசாயம், வேலூர்.